<u>2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>

**<u>O.S.No.390 /2023</u>**

**23.09.2025 பி.வா.சா. 1 திரு. ஈஸ்வரமூர்த்தி**

2025 வது ஆண்டு செப்டம்பர் மாதம் 23 நாள் பி.வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>வாதி மற்றும் 2 ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை</u>

<u>1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் ஈரோட்டில் உள்ள Hotel லில் சூப்பர்வைசராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் 2 ம் பிரதிவாதி சுப்பையாவிற்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்தேனா என்றால் எழுதிக்கொடுத்தேன். நான் எனது தகப்பானாருக்கு தாவா சொத்தை பொறுத்து 27.08.1990 ல் ஒரு செட்டில்மென்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். நான் எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தின் படி பட்டா, சிட்டா ஆகியவை எனது தகப்பனார் பெயருக்கு மாறியதா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தின்படி எனது தகப்பனார் பிராது தபசில் சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் எனது அப்பா 2011 ல் இறந்துவிட்டார். எனது தகப்பனார் எந்த காலத்திலும் செட்டில்மென்ட் ஆவணத்தின்படி பிராது தபசில் சொத்தை அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல. செட்டில்மென்ட் ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்பதால் தான் நான் பொது அதிகார ஆவணத்தை 2 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுத படிக்க தெரியும். பிராது தபசில் சொத்து எனக்கு ஒரு நண்பர் இலவசமாக கொடுத்தார். 11.03.1985 தேதியில் நான் முகைதீன் மஸ்தான் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. 11.03.1985 தேதியிட்ட கிரைய ஆவணத்தை நான் பொது அதிகாரம் எழுதும் போது 2 ம் பிரதிவாதியிடம் பிராது தபசில் சொத்தை விற்பனை செய்வதற்காக ஒப்படைத்தேன் என்றால் சரிதான். நான் கடனை திருப்பி செலுத்திய போது கிரைய ஆவணத்தை திருப்பி

கேட்டேனா என்றால் நான் பத்திரத்தை கேட்கவில்லை 2ம் பிரதிவாதியை பார்க்கவும் இல்லை. 2ம்பிரதிவாதியிடம் பொது அதிகார ஆவணத்தை பிராது தபசில் சொத்தை விற்பனை செய்வதற்காக எழுதிக்கொடுத்ததால் கிரைய ஆவணத்தை கேட்கவில்லை என்றால் சரியல்ல. பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் 2ம் பிரதிவாதியின் மூலம் 3ம்பிரதிவாதிக்கு வா.சா.ஆ–6 ஆவணம் மூலம் விற்பனை செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கின் வாதியை எனக்கு தெரியும். வாதியை எனக்கு 30 வருடங்களாக தெரியும். வாதிக்கு நான் எங்கே வசித்து வருகிறேன் என்பதும், எனக்கு வாதி எங்கே வசித்து வருகிறார் என்பதும் தெரியும் என்றால் சரிதான். என்பேரிலும் வாதி பேரிலும் மோசடி ஆவணம் உற்பத்தி செய்ததாக 1ம்பிரதிவாதி புகார் அளித்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நானும் வாதியும் கூட்டு சேர்ந்து தான் பிராது தபசில் சொத்தை அபகரிப்பதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணம் நடைமுறைக்கு வராததால் தான் நான் 2ம் பிரதிவாதி மூலம் 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ–6 கிரைய ஆவணம் செல்லும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தின் படி 3ம்பிரதிவாதி 1ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ–7 கிரைய ஆவணமும் செல்லும் என்றால் சரியல்ல. நான் 1ம்பிரதிவாதியை கஷ்டப்படுத்த வேண்டும் என்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

upload on

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2025.09.23 17:58:10 +0530